# PAPER-III
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________
   (Name) ____________________________
2. (Signature) ____________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : ...............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.______________________________
(In words)

**S 2 6 1 3**

Time : **2 $^1/_2$** hours] [Maximum Marks : **150**

Number of Pages in this Booklet : **20**

Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal / polythene bag on the booklet. Do not accept a booklet without sticker-seal / without polythene bag and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ● (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील / पोलिथीन बैग को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील / बिना पोलिथीन बैग की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण** : (A) (B) ● (D) जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई अंक काटे नहीं जाएँगे ।**

# TAMIL
# தமிழ்
## Paper-III
## தாள் - III

**Note :** This paper contains **seventy five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are compulsory.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் எழுபத்தைந்து (75) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** ‘ஔ’ எழுத்திற்கு இசை நிறைவு
(A) (அ) (B) இ
(C) (உ) (D) எ

**2.** மொழி கரந்து மொழிதல்
(A) பழமொழி (B) பழிகரப்பு
(C) பழிமொழி (D) இழிமொழி

**3.** பத்தினி வழிபாட்டைத் தொடங்கிவைத்த அரசன்
(A) பாண்டியன் (B) கோப்பெருஞ்சோழன்
(C) சேரன் செங்குட்டுவன் (D) இமயவரம்பன்

**4.** காவிரியாறு கடலில் கலக்குமிடத்தில் இருந்த பண்டைய நகரம்
(A) கபாடபுரம் (B) மதுரை
(C) கொற்கை (D) பூம்புகார்

**5.** கணபதி வழிபாடு தமிழகத்தில் தொடங்கிய காலம்
(A) கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு (B) கி.பி.ஆறாம் நூற்றாண்டு
(C) கி.பி.ஏழாம் நூற்றாண்டு (D) கி.பி.எட்டாம் நூற்றாண்டு

**6.** இந்தியாவில் மிகப்பெருந்தொகையில் கல்வெட்டுக்கள் கிடைக்கும் மாநிலம்
(A) ஆந்திரம் (B) தமிழ் நாடு
(C) கேரளம் (D) கருநாடகம்

**7.** விஞ்ஞான முறையில் இந்திய வரலாறு எழுதப்புகுவார் கிருஷ்ணா, காவிரி, வைகை ஆற்றங்கரைகளில் தாம் முதன்முதலில் ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டும் எனக் கூறியவர்
(A) கா.மீனாட்சி சுந்தரம்
(B) பெ.சுந்தரம்பிள்ளை
(C) திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(D) தெ.பெ.மீனாட்சி சுந்தரன்

8. பிற்சான்றோர் என்று பேராசிரியர் குறிப்பிடும் ஆசிரியர்கள் இயற்றிய நூல்கள்
   (A) கீழ்க்கணக்கு  (B) தேவாரங்கள்
   (C) திவ்யபிரபந்தங்கள்  (D) தலபுராணங்கள்

9. யவனர்கள் கடல்வாணிகத்தின் பொருட்டு முதலில் வந்த துறைமுகம்
   (A) தொண்டி  (B) முசிறி
   (C) கொற்கை  (D) பூம்புகார்

10. நரைமுடித்துச் சொல்லால் முறைசெய்த சோழன்
   (A) கரிகாலன்  (B) குலோத்துங்கன்
   (C) விஜயாலயன்  (D) முதலாம் இராஜேந்திரன்

11. திருலெல்வேலி சரித்திரம் என்ற நூலை எழுதியவர்
   (A) குண்டர்ட்  (B) பெஸ்கி
   (C) போப்  (D) கால்டுவெல்

12. உரிச்சொல் நிகண்டு இயற்றியவர்
   (A) காங்கேயர்  (B) இரேவணச்சித்தர்
   (C) திவாகரர்  (D) வீரமாமுனிவர்

13. வஞ்சிப்பாவிற்கு உரிய சீர்
   (A) கனிச்சீர்  (B) காய்ச்சீர்
   (C) மாச்சீர்  (D) விளச்சீர்

14. தஞ்சைவாணன் கோவையை இயற்றியவர்
   (A) சிதம்பரக் கவிராயர்
   (B) பொய்யாமொழிப்புலவர்
   (C) ஆண்டிப்புலவர்
   (D) பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்

15. ஜோதி என்ற புனைபெயரில் எழுதியவர்
   (A) கி.வா.ஜ.  (B) உ.வே.சா.
   (C) திரு.வி.க.  (D) தெ.பொ.மீ.

16. எட்டுத்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாக்கள் பெற்ற கடவுளர்
   (I) சிவன்  (II) திருமால்
   (III) முருகன்  (IV) பிரமன்
   இவற்றுள்
   (A) I, II, III சரி  (B) அனைத்தும் சரி
   (C) அனைத்தும் தவறு  (D) I, III, IV சரி

**17.** இராசராச சோழன் வளர்த்த கலை

(I) இசைக்கலை (II) நடனக்கலை
(III) சிற்பக்கலை (IV) கட்டடக்கலை

இவற்றுள்

(A) I,II,III சரி (B) அனைத்தும் சரி
(C) அனைத்தும் தவறு (D) I, II, IV சரி

**18.** மறைமலையடிகள் எழுதிய நூற்கள்

(I) சாகுந்தலம் (II) தமிழர் மதம்
(III) வாழ்வும் வழிபாடும் (IV) பெண்ணின் பெருமை

இவற்றுள்

(A) I, II, III சரி (B) I,III, IV சரி
(C) அனைத்தும் சரி (D) அனைத்தும் தவறு

**19.** (I) நாலடியாருக்கு அதிகாரம் வகுத்தவர் பதுமனார்

(II) அவரே அதற்கு உரையும் எழுதியுள்ளார்

(III) அதன் அதிகாரங்களை முப்பாலாகப் பகுத்து உரை கண்டவர் தருமர்

(IV) அதன் உரைகள் அனைத்திலும் பரிமேலழகர் உரையே சிறந்தது

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) I, II, IV சரி
(C) I,II,III சரி (D) அனைத்தும் தவறு

**20.** சிறுபஞ்ச மூலங்களில் இடம் பெறுவன

(I) தழுதாழை (II) சிறுவழுதுணை
(III) நெருஞ்சி (IV) கண்டங்கத்திரி

இவற்றுள்

(A) II, III,IV சரி (B) அனைத்தும் சரி
(C) அனைத்தும் தவறு (D) I, II, III சரி

**21.** திருமந்திரம்

(I) யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் தொடர் கொண்டது

(II) சைவசித்தாந்தம் என்ற தொடரை முதன்முதலில் ஆண்டது

(III) எட்டெழுத்தின் ஆற்றலை எடுத்தியம்புகின்றது

(IV) சோதிடம், மருத்துவம், யோகம் போன்றவற்றைப் பற்றிப் பேசுகிறது

இவற்றுள்

(A) அனைத்தும் தவறு (B) I, II, III சரி
(C) அனைத்தும் சரி (D) I, III, IV சரி

**22.** முத்தொள்ளாயிரம்

(I) மூவேந்தர் பற்றியது

(II) செவ்வியல் பனுவல்களுள் ஒன்று

(III) அறம், பொருள், இன்பம் பற்றியது

(IV) ஆசிரியப்பாவால் ஆனது

இவற்றுள்

(A) I, II, III சரி

(B) அனைத்தும் சரி

(C) I, II, IV சரி

(D) அனைத்தும் தவறு

**23.** பாட்டியல் நூல்கள்

(I) கீழ்க்கணக்கு இலக்கணம் வகுத்தன

(II) எழுத்துக்களை வருண அடிப்படையில் பாகுபாடு செய்துள்ளன

(III) பன்னிரு ஆசிரியர்களால் இயற்றப்பட்டன

(IV) எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று இயல்களை உடையன

இவற்றுள்

(A) அனைத்தும் சரி

(B) I, II, IV சரி

(C) அனைத்தும் தவறு

(D) I, III, IV சரி

**24.** குளகம் என்பது

(I) நால்வகைச் செய்யுள்களுள் ஒன்று

(II) சொல், பொருளடிப்பாடையில் இருவகைப்படுவது

(III) தனி நின்று முடிவது

(IV) பலபாட்டு ஒருவினை கொள்வது

இவற்றுள்

(A) I, III,IV சரி

(B) அனைத்தும் சரி

(C) I, II, III சரி

(D) அனைத்தும் தவறு

**25.** உவமை அணி

(I) பண்பு, தொழில், பயன் இவற்றுள் ஒன்றோ, பலவோ பெற்று வருவது

(II) பொருளோடு பொருள் புணர்ந்து ஒப்புமை தோன்ற வருவது

(III) உவம உருபுகள் பெற்று வருவது

(IV) புலவன் தான் குறித்து ஏற்றுதலைக் கொண்டு வருவது

இவற்றுள்

(A) I, II, III சரி

(B) அனைத்தும் சரி

(C) அனைத்தும் தவறு

(D) I,II, IV சரி

26. **<u>உறுதிக்கூற்று (உ)</u>** : அகராதிகள் நிலைபெற்ற பின்னும் இருபதாம் நூற்றாண்டில் நிகண்டு இயற்றப்பட்டுள்ளது

**<u>காரணம் (கா)</u>** : ஆசிரியர் தம் புலமையைக் காட்ட நிகண்டு இயற்றியிருக்கலாம்

(A) (உ) சரியன்று , (கா) சரி

(B) (உ) , (கா). இரண்டும் சரியல்ல

(C) (உ) சரி , (கா) சரியன்று

(D) (உ) , (கா) இரண்டும் சரி

27. **<u>உறுதிக்கூற்று (உ)</u>** : சைவ, வைணவ சமயங்களை வைதீக சமயங்கள் என்பர்

**<u>காரணம் (கா)</u>** : அவை வேதமரபிற்கு எதிரானவை

(A) (உ) சரி , (கா) சரியன்று

(B) (உ) , (கா) இரண்டும் சரி

(C) (உ) , (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரியன்று , (கா) சரி

28. **<u>உறுதிக்கூற்று (உ)</u>** : 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறித்தவ சமயப்பணி தமிழகத்தில் விரைவாக நடைபெறத் தொடங்கியது

**<u>காரணம் (கா)</u>** : 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சமயப்பணிக்காக அமைப்புகள் உருவாக்கப்பட்டன

(A) (உ) , (கா) இரண்டும் சரி

(B) (உ) , (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ) சரி , (கா) சரியன்று

(D) (உ) சரியன்று , (கா) சரி

29. **<u>உறுதிக்கூற்று (உ)</u>** : தமிழகத்து முஸ்லீம்களுள் மிகப் பெரும்பாலோருடைய சமய, சமூக வாழ்வில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் உள்ளன

**<u>காரணம் (கா)</u>** : அவர்கள் தமிழ்க் குடிகளாக இருந்து இசுலாமை ஏற்றவர்கள்

(A) (உ) சரி , (கா) சரியன்று

(B) (உ) , (கா) இரண்டும் சரி

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரியன்று , (கா) சரி

**30.** **<u>உறுதிக்கூற்று (உ)</u>** : தமிழகத்தில் முதன்முதல் சமய, சமூகச் சீர்திருத்த இயக்கத்தை வைகுண்ட சுவாமிகள் தொடங்கினார்

**<u>காரணம் (கா)</u>** : அன்றைய ஆட்சியாளரின் அடக்குமுறை, சாதி, சமயக்கட்டு இவற்றுக்கு எதிராகச் செயல்பட்டு அன்பு நெறியையும் இறையொருமையையும் வலியுறுத்தினார்

(A) (உ) , (கா) இரண்டும் சரி

(B) (உ) , (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ) சரி , (கா) சரியன்று

(D) (உ) சரியன்று , (கா) சரி

**31.** **<u>உறுதிக்கூற்று (உ)</u>** : அகரம் முதல் னகரம் இறுவாய் முப்பதும் முதல் எழுத்துக்கள் எனப்படும்

**<u>காரணம் (கா)</u>** : அவை மொழிமுதலில் வருவன

(A) (உ) , (கா) இரண்டும் சரியல்ல

(B) (உ) , (கா) இரண்டும் சரி

(C) (உ) சரி , (கா) சரியன்று

(D) (உ) சரியன்று , (கா) சரி

**32.** **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : தடவும் கயவும் நளியும் பெருமை

**<u>காரணம்</u> (கா)** : ஒருசொல் பல்பொருட்டு உரிமை பூணுதல் மொழி இயல்பு

(A) (உ) சரி , (கா) சரியன்று

(B) (உ) , (கா) இரண்டும் சரி

(C) (உ) , (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரியன்று , (கா) சரி

**33.** **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : மெய்ப்பாடு நுட்பம் சான்றது

**<u>காரணம்</u> (கா)** : கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தர்க்கே அது தெளிவாகும்.

(A) (உ) சரி , (கா) சரியன்று

(B) (உ) சரியன்று , (கா) சரி

(C) (உ) , (கா) இரண்டும் சரி

(D) (உ) , (கா) இரண்டும் சரியல்ல

34. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ) :*** மடக்கு என்பது சொல்லணிகளுள் ஒன்று

<u>***காரணம்***</u> ***(கா)*** : எழுத்தின் கூட்டம் இடை பிறிது இன்றியும் பெயர்த்தும் வேறுபொருள் உணர்த்தாதது அது

(A) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*

(B) *(உ) சரி , (கா) சரியன்று*

(C) *(உ) சரியன்று , (கா) சரி*

(D) *(உ) , (கா) இரண்டும் சரி*

35. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ) :*** ஒரு குடியரசின் நான்காம் தூண் என ஊடகம் குறிக்கப்படுகிறது.

<u>***காரணம்***</u> ***(கா)*** : உண்மைகளை இருட்டடிப்பு செய்யும் தன்மை உடையது அது.

(A) *(உ) சரி , (கா) சரியன்று*

(B) *(உ) சரியன்று , (கா) சரி*

(C) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*

(D) *(உ) , (கா) இரண்டும் சரி*

36. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ) :*** தமிழர்களின் தொன்மையான கூத்து துடிநிலை ஆகும்

<u>***காரணம்***</u> ***(கா)*** : வேட்டைத் தொழிலுக்கு உதவிய துடிக்கு நன்றி தெரிவுக்கும் முகமாக அதனை முழக்கி ஆடுவது அவர்களது வழக்கம்.

(A) *(உ) , (கா) இரண்டும் சரி*

(B) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*

(C) *(உ) சரி , (கா) சரியன்று*

(D) *(உ) சரியன்று , (கா) சரி*

37. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ) :*** அருவியை நீர்வீழ்ச்சி எனவும் வழங்குவர்.

<u>***காரணம்***</u> ***(கா)*** : கடன் மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியின் சொற்பெருக்கக் காரணிகளுள் ஒன்று

(A) *(உ) சரியன்று , (கா) சரி*

(B) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*

(C) *(உ) சரி , (கா) சரியன்று*

(D) *(உ) , (கா) இரண்டும் சரி*

**38.** **<u>உறுதிக்கூற்று</u> *(உ)* :** *ஒவ்வாக் காதல் கைக்கிளை எனப்படும்*
**<u>காரணம்</u> *(கா)* :** *ஏற்றமிகு உறவைக் கைக்கிளை எனும் கலைச்சொல் குறிக்கின்றது*

(A) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*
(B) *(உ) , (கா) இரண்டும் சரி*
(C) *(உ) சரி , (கா) சரியன்று*
(D) *(உ) சரியன்று , (கா) சரி*

**39.** **<u>உறுதிக்கூற்று</u> *(உ)* :** *அந்தணப்பா என்று வெண்பா குறிக்கப்படும்.*
**<u>காரணம்</u> *(கா)* :** *அந்தணர்களே வெண்பா யாப்பதில் வல்லவர்கள்.*

(A) *(உ) சரியன்று , (கா) சரி*
(B) *(உ) சரி , (கா) சரியன்று*
(C) *(உ) , (கா) இரண்டும் சரி*
(D) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*

**40.** **<u>உறுதிக்கூற்று</u> *(உ)* :** பஞ்சும் பசியும் என்று ஒரு புதினம் உண்டு
**<u>காரணம்</u> *(கா)* :** *அது உழவுத்தொழிலையும் அத்தொழில் புரிவோரின் வறுமையையும் மையமாகக் கொண்டது .*

(A) *(உ) சரி , (கா) சரியன்று*
(B) *(உ) , (கா) இரண்டும் சரி*
(C) *(உ) , (கா) இரண்டும் சரியல்ல*
(D) *(உ) சரியன்று , (கா) சரி*

**41.** *<u>நிரல் படுத்துக.</u>*
*இறந்தகால இடைநிலைகள்*

(A) *த, இன், ற, ட*
(B) *த, ற, இன்*
(C) *த, ட, ற, இன்*
(D) *த, இன், ட, ற*

**42.** *<u>நிரல் படுத்துக.</u>*
*பஞ்சாயுதம்*

(A) *சங்கு, சக்கரம், வாள், தண்டு, வில்*
(B) *சங்கு, வாள், சக்கரம், தண்டு, வில்*
(C) *சங்கு, தண்டு, வாள், வில், சக்கரம்*
(D) *சங்கு, தண்டு, வில், வாள், சக்கரம்*

**43.** <u>*நிரல் படுத்துக.*</u>

*பதவி வகைகள்*

(A) *சாலோகம், சாமீயம், சாரூகம், சாயுச்சியம்*

(B) *சாலோகம், சாரூகம், சாமீயம், சாயுச்சியம்*

(C) *சாலோகம், சாயுச்சியம், சாமீபம், சாரூபம்*

(D) *சாலோகம், சாரோகம், சாயுச்சியம், சாரூபம்*

**44.** <u>*நிரல் படுத்துக.*</u>

*கொன்னைச் சொல்*

(A) *அச்சம், பயமிலி, காலம், பெருமை*

(B) *அச்சம், காலம், பயமிலி, பெருமை*

(C) *அச்சம், காலம், பெருமை, பயமிலி*

(D) *அச்சம், பயமிலி, பெருமை, காலம்*

**45.** <u>*நிரல் படுத்துக.*</u>

*குடி வகை*

(A) *பாணன், கடம்பன், பறையன், துடியன்*

(B) *பாணன், பறையன், துடியன், கடம்பன்*

(C) *பாணன், துடியன், பறையன், கடம்பன்*

(D) *பாணன், பறையன், கடம்பன், துடியன்*

**46.** <u>*நிரல் படுத்துக.*</u>

*படைவகுப்பு வகைகள்*

(A) *அணி, உண்டை, ஒட்டை, யூகம்*

(B) *அணி, ஒட்டை, யூகம், உண்டை*

(C) *அணி, யூகம், ஒட்டை. உண்டை*

(D) *அணி, உண்டை, யூகம், ஒட்டை*

**47.** <u>*நிரல் படுத்துக.*</u>

*ஓசை*

(A) *எடுத்தல், நலிதல், படுத்தல், விலங்கல்*

(B) *எடுத்தல், படுத்தல், விலங்கல், நலிதல்*

(C) *எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல்*

(D) *எடுத்தல், விலங்கல், நலிதல், படுத்தல்*

**48.** <u>நிரல் படுத்துக.</u>

காட்சி

(A) ஐயம், நிருவிகற்பம், விகற்பம், திரிபு

(B) ஐயம், நிருவிகற்பம், திரிபு, விகற்பம்

(C) ஐயம், திரிபு, நிருவிகற்பம், விகற்பம்

(D) ஐயம், திரிபு, விகற்பம், நிருவிகற்பம்

**49.** <u>நிரல் படுத்துக.</u>

பண்வகைகள்

(A) பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி

(B) பாலை, செவ்வழி, குறிஞ்சி, மருதம்

(C) பாலை, மருதம், செவ்வழி, குறிஞ்சி

(D) பாலை, செவ்வழி, மருதம், குறிஞ்சி

**50.** <u>நிரல் படுத்துக.</u>

உடல் வகைகள்

(A) தூலம், காரணம், சூக்குமம், மகாகாரணம்

(B) தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம்

(C) தூலம், மகாகாரணம், காரணம், சூக்குமம்

(D) தூலம், காரணம், மகாகாரணம், சூக்குமம்

**51.** <u>நிரல் படுத்துக.</u>

வாக்கு

(A) சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி

(B) சூக்குமை, மத்திமை, பைசந்தி, வைகரி

(C) சூக்குமை, பைசந்தி, வைகரி, மத்திமை

(D) சூக்குமை, மத்திமை, வைகரி, பைசந்தி

**52.** <u>நிரல் படுத்துக.</u>

ஐந்தரு

(A) சந்தனம், அரிசந்தனம், கற்பகம், மந்தாரம், பாரிஜாதம்

(B) சந்தனம், பாரிஜாதம், மந்தாரம், கற்பகம், அரிசந்தனம்

(C) சந்தனம், கற்பகம், மந்தாரம், பாரிஜாதம், அரிசந்தனம்

(D) சந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம், அரிசந்தனம்

**53.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒழியிசை | (1) | ஏ |
| (b) | எதிர்மறை | (2) | மன் |
| (c) | தெரிநிலை | (3) | உம் |
| (d) | பிரிநிலை | (4) | ஓ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (3) | (4) | (1) |
| (B) | (2) | (4) | (1) | (3) |
| (C) | (2) | (1) | (3) | (4) |
| (D) | (2) | (4) | (3) | (1) |

**54.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | முறைப்பெயர் | (1) | இலக்குமி |
| (b) | பண்புகொள்பெயர் | (2) | மூக்கன் |
| (c) | விரவுப்பெயர் | (3) | பெரியான் |
| (d) | சினைப்பெயர் | (4) | அன்னை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (2) | (3) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (4) | (3) | (1) | (2) |
| (D) | (4) | (2) | (1) | (3) |

**55.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | யான் | (1) | மேவல் |
| (b) | அமர்தல் | (2) | சூழ்ச்சி |
| (c) | வாள் | (3) | கவின் |
| (d) | உசா | (4) | ஒளி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (4) | (2) |
| (B) | (3) | (4) | (2) | (1) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

**56.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | இராசகோபால் | (1) | கண்ணதாசன் |
| (b) | ஜெகதீசன் | (2) | தமிழ் ஒளி |
| (c) | முத்தையா | (3) | ஈரோடு தமிழன்பன் |
| (d) | விஜயரங்கம் | (4) | சுரதா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (4) | (1) | (3) | (2) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

**57.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | வினையுவம உருபு | (1) | பொருவ |
| (b) | பயனுவம உருபு | (2) | இறப்பு |
| (c) | மெய்யுவம உருபு | (3) | வியப்ப |
| (d) | உருவுவம உருபு | (4) | கடுப்ப |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (1) | (4) | (3) |
| (B) | (2) | (1) | (3) | (4) |
| (C) | (2) | (3) | (4) | (1) |
| (D) | (2) | (4) | (3) | (1) |

**58.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | முடி | (1) | மயிரைப் பக்கன் முடித்தல் |
| (b) | கொண்டை | (2) | மயிரைப் பின்னே செருகுதல் |
| (c) | சுருள் | (3) | மயிரைச் சுருட்டி முடித்தல் |
| (d) | குழல் | (4) | மயிரை உச்சியில் முடித்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (4) | (1) | (3) | (2) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**59.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | வ.உ.சி. | (1) | கானல் வரி |
| (b) | உ.வே.சா. | (2) | நட்சத்திர மாலை |
| (c) | சி.வை.தா. | (3) | மெய்யறிவு |
| (d) | தெ.மொ.மீ. | (4) | கண்டதும் கேட்டதும் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (2) | (1) |
| (B) | (3) | (4) | (1) | (2) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (3) | (1) | (2) | (4) |

**60.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | உலா | (1) | வேதநாயக சாஸ்திரியார் |
| (b) | தூது | (2) | தத்துவராயர் |
| (c) | பரணி | (3) | உமாபதி சிவாச்சாரியார் |
| (d) | குறவஞ்சி | (4) | சேரமான் பெருமாள் நாயனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (4) | (3) | (1) | (2) |
| (D) | (4) | (1) | (2) | (3) |

**61.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | சுல்தான் அப்துல் காதர் | (1) | திரு நாகூர் திரிபந்தாதி |
| (b) | ஹமீது இப்ராகிம் | (2) | நாகைக்கலம்பகம் |
| (c) | செய்குத் தம்பி பாவலர் | (3) | குணங்குடியார் பாடல்கள் |
| (d) | சவ்வாதுப் புலவர் | (4) | இராசநாயகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (4) | (2) | (1) |
| (C) | (3) | (2) | (1) | (4) |
| (D) | (3) | (1) | (4) | (2) |

**62.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ராபர்ட்-டி-நொபிலி | (1) | நற்கருணை தியானமாலை |
| (b) | ஜோசப் பெஸ்கி | (2) | தமிழ்-போர்ச்சுக்கீசு அகராதி |
| (c) | கால்டுலெல் | (3) | வேதஉதாரணத் திரட்டு |
| (d) | இரேனியஸ் | (4) | திருக்காவலூர் கலம்பகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (1) | (4) | (3) |
| (B) | (2) | (4) | (1) | (3) |
| (C) | (2) | (4) | (3) | (1) |
| (D) | (2) | (3) | (4) | (1) |

**63.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ராஜம் கிருஷ்ணன் | (1) | மா-னீ |
| (b) | ஹெப்சிபா ஜேசுதாசன் | (2) | கல்மரம் |
| (c) | திலகவதி | (3) | சிறகுகள் முறியும் |
| (d) | அம்பை | (4) | கரிப்புமணிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (2) | (3) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (4) | (2) | (3) | (1) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**64.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | நா.காமராசன் | (1) | ஊசிகள் |
| (b) | அப்துல் ரகுமான் | (2) | ஆகாயத்துக்கு அடுத்த வீடு |
| (c) | மு.மேத்தா | (3) | பித்தன் |
| (d) | மீரா | (4) | சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (3) | (2) | (1) |
| (B) | (4) | (1) | (3) | (2) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (4) | (2) | (3) | (1) |

**65.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | கன்னல் | (1) | பட்டப் பெயர் |
| (b) | சடங்கவி | (2) | நாழிகை வட்டில் |
| (c) | ஓரை | (3) | ஆடவர் சட்டை |
| (d) | கஞ்சுகம் | (4) | மகளிர் விளையாட்டு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (4) | (3) | (1) |
| (B) | (2) | (1) | (3) | (4) |
| (C) | (2) | (3) | (4) | (1) |
| (D) | (2) | (1) | (4) | (3) |

**66.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | குடியரசு | (1) | ம.பொ.சி. |
| (b) | செங்கோல் | (2) | நா.பார்த்தசாரதி |
| (c) | தீபம் | (3) | கோமல் சுவாமிநாதன் |
| (d) | சுபமங்களா | (4) | பெரியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (2) | (3) |
| (B) | (4) | (1) | (3) | (2) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (2) | (3) | (1) |

**67.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | கதரின் வெற்றி | (1) | நவாப் ராஜமாணிக்கம் |
| (b) | பக்தராமதாஸ் | (2) | கிருஷ்ணசாமிப் பாவலர் |
| (c) | சபாபதி | (3) | இந்திரா பார்த்தசாரதி |
| (d) | பசி | (4) | பம்மல் சம்பந்த முதலியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (3) | (4) | (1) |
| (B) | (2) | (1) | (3) | (4) |
| (C) | (2) | (4) | (3) | (1) |
| (D) | (2) | (1) | (4) | (3) |

**68-75.** *பின்வரும் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.*

*மொழி, கலை, நாகரிகம் பிற பிற நாடுகளில் இருந்ததைக் காட்டிலும் தமிழகத்தில் சிறப்புற்றிருந்தன. அந்தச் செல்வம் நிறைந்த மகோன்னத காலத்தில் உள்ள தமிழ் நாட்டின் நினைப்புக்கும் - கலை, மொழி, நாகரிகம் பிற நாட்டுக்கு அடிமையாகி, செல்வம் சீரழிக்கப்பட்டு மனிதர்கள் குகைக்குள் அடைபட்ட சிறுத்தையாகி, பேதா பேதத்தால் பிரிந்து ஒற்றுமையில்லாமல் வாழ வழியில்லாத நிலையில் இருக்கும் இக்கால நினைப்புக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. சங்க காலத்திலுள்ள தமிழ்நாட்டின் நிலைக்கு இந்நாள் தமிழ் நாட்டின் நிலை எவ்வளவோ தாழ்ந்திருக்கிறது. இவாவாதத்திற்குச் சான்றாகத் தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பட்டினப்பாலை ஆகியவை அமைகின்றன.*

*இக்காலத்தில் உலவும் நாசத்தை விளைவிக்கும் நம்பிக்கைகளை அக்காலத்தில் காணமுடியாது. தமிழர் எண்ணம் பிறருக்கு அடிமையாகதிருந்த காலத்தில் எப்படிக் காணமுடியும் ? அகநானூறு, புறநானூறுகளில் எந்தத் தமிழ் நாட்டு மன்னனாவது போருக்குக் கிளம்பும்போது, படை கிளம்பும் முன் யாகம் செய்தான் என்றோ, பரமசிவத்திடம் பாசுபதம் பெற்றான் என்றோ எங்கேயாவது பாடலுண்டா ? அல்லது படை கிளம்பி எதிரிகளுடன் போரிடும் பொழுதாவது வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், மோகனாஸ்திரம், அக்னியாஸ்திரம் ஆகிய அஸ்திரங்களில் எந்த அஸ்திரமாவது எதிரியை வீழ்த்திய போது உதவியதாக எங்காவது பாடல் இருப்பதாகச் சொல்ல முடியுமா ? பின் எப்படிப் போர் நடந்திருக்கும் ? தமிழ் மன்னர்கள் வெற்றி பெற்றிருப்பர் ? போர் என்றதும் வீரர்கள் கூடியிருப்பர் ; பட்டாளம் அணிவகுக்கப்பட்டிருக்கும் ; போர் முரசு கொட்டியிருப்பர் ; வஞ்சிகள் கொடி இறக்கப்பட்டிருக்கும் ; அகழிகளை வெட்டியிருப்பார்கள். வாய்க்கால்களைத் தாண்டியிருப்பார்கள் ; ஆறுகளை நீந்தியிருப்பார்கள் ; ஆரண்யங்களைக் கடந்திருப்பார்கள் ; அவர்கள் தோள் வீங்கியிருக்கும் ; கண்கள் சிவந்திருக்கும் ; வேல் எறிந்திருப்பர் ; அது எதிரியின் விலாவில் பாய்ந்திருக்கும் ; வெற்றி கிடைத்திருக்கும். பரணி பாடியிருப்பர் ! இப்படித்தான் தமிழகத்தில் போர் நடந்ததாகப் பழம்பெரும் நூல்களில் காணமுடியுமே தவிர வேறு விதமாகக் காண முடியாது.*

**68.** பாசுபதம் அளிப்பவன்

(A)பிரமன் (B) திருமால்

(C) சிவன் (D) முருகன்

**69.** போர் எனில்

(I) பட்டாளம் அணிவகுக்கும்

(II) முரசு முழங்கப்படும்

(III) கொடிகள் உயர்த்தப்படும்

(IV) அகழிகள் வெட்டப்படும்

இவற்றுள்

(A) I, II, III சரி

(B) II, III, IV சரி

(C) I, III, IV சரி

(D) I, II, IV சரி

**70.** __உறுதிக்கூற்று__ **(உ) :** இன்றைய தமிழர்கள் குகைக்குள் அடைபட்ட சிறுத்தைகளாகி விட்டனர்.

__**காரணம்**__ **(கா) :** பிறநாட்டுக்கு அடிமையாகிப் போயினர்.

(A) (உ) , (கா) இரண்டும் சரி

(B) (உ) சரி , (கா) சரியன்று

(C) (உ) சரியன்று , (கா) சரி

(D) (உ) , (கா) இரண்டும் சரியல்ல

**71.** __நிரல் படுத்துக.__

(A) வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், அக்கினியாஸ்திரம், மோகனாஸ்திரம்

(B) வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், மோகனாஸ்திரம், அக்கினியாஸ்திரம்

(C) வருணாஸ்திரம், மோகனாஸ்திரம், வாயவாஸ்திரம், அக்கினியாஸ்திரம்

(D) வருணாஸ்திரம், அக்கினியாஸ்திரம், வாயுவாஸ்திரம், மோகனாஸ்திரம்

**72.** சங்ககாலத்தில் தமிழ் நாட்டின் நிலை உயர்ந்திருந்ததற்குச் சான்றாவனவற்றுள் ஒன்று

(A) நற்றிணை (B) ஐங்குறுநூறு

(C) புறநானூறு (D) பதிற்றுப்பத்து

**73.** பொருத்துக:

(a) வீங்கியிருக்கும் (1) வேல்

(b) சிவந்திருக்கும் (2) வெற்றி

(c) பாய்ந்திருக்கும் (3) தோள்

(d) கிடைத்திருக்கும் (4) கண்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (2) | (1) |
| (B) | (3) | (2) | (4) | (1) |
| (C) | (3) | (1) | (2) | (4) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

**74.** நிரல் படுத்துக.

(A) தொல்காப்பியம், பட்டினப்பாலை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு

(B) தொல்காப்பியம், குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை

(C) தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பட்டினப்பாலை

(D) தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, பட்டினப்பாலை

**75.** பொருத்துக:

(a) பாடியிருப்பர் (1) வேல்

(b) எறிந்திருப்பர் (2) ஆரண்யம்

(c) கடந்திருப்பர் (3) ஆறு

(d) நீந்தியிருப்பர் (4) பரணி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (1) | (3) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (4) | (2) | (3) | (1) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**Space For Rough Work**

**Space For Rough Work**